பக்கங்கள்: 06

# காலைக்கதிர்


Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 26 புதன்கிழமை 11.11.2020 கதிர் 237

## கொரோனா வைரஸிலிருந்து 10 ஆயிரம் பேர் குணமடைவு!

இலங்கையில் இன்று இதுவரையான காலப்பகுதியில் 646 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 10 ஆயிரத்து 183 ஆக உயர்வடைந்துள்ளது. 2

# இன்றும் மூன்று பேர் உயிரிழப்பு; கொரோனா சாவு 44 ஆக உயர்வு

கொழும்பு, நவ.11

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இன்றும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதையடுத்து கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு 11 ஐச் சேர்ந்த 40 வயது ஆண் ஒருவரும், களனிப் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவரும் கொரோனாவால் இன்று உயிரிழந்துள்ளனர். 2

## இளம் கைதி திடீர் மரணம்

அங்குனகொலபெலஸ்ச சிறைச்சாலையில் கைதியொருவர் திடீர் உடல் நலக்குறைவினால் இன்று காலை உயிரிழந்துள்ளார் எனச்சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர் சிலாபத்தைச் சேர்ந்த 28 வயதுடையவர் ஆவார். 2

## பெருந்தொகை கேரளக் கஞ்சாவுடன் மன்னாரில் இளைஞர் ஒருவர் கைது!



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, துருக்கி சிட்டிப் பகுதியில் சுமார் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாப் பொதிகளுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 2

## விரிவடையும் ஊடகக் கொத்தணி

# பிரபல வானொலி சேவையில் நால்வருக்குத் தொற்று உறுதி

### இருவர் தமிழ் அறிவிப்பாளர்கள்

**கொழும்பு,நவம்பர்11**

**இலங்கையின் பிரபல தனியார் தமிழ் வானொலியான அறிவிப்பாளர்கள் இருவர் உட்பட அங்கு பணியாற்றும் நால்வருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.**

**அந்நிறுவனத்தின் தமிழ், சிங்கள வானொலிக் குழுமங்களில் பணியாற்றும் அறுபது பணியாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் நால்வருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.**

**நால்வரும் ஆண்கள் எனவும், அவர்களில் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவர் என்றும், மற்றையவர் யாழ்ப்பாணம் புத்தூரைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது. இந்த இருவரில் ஒருவர் கொழும்பிலும் மற்றையவர் தெஹிவளையிலும் தற்காலிகமாகத் தங்கிப் பணியாற்றி வருகின்றார்கள்.** 2

## விவசாயி வயலில் விழுந்து மரணம்


புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட விசுவமடு இளங்கோபுரத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த - 41வயதுடைய - மாரிமுத்து சுதாகரன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்கப்பட்டார்.

இன்று காலை வயலில் வரம்பு வெட்டிக்கொண்டிருந்த வேளை இவர் வயலில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என இவரது உறவினர்கள் தெரிவித்துள்ளார்கள். 2

## 'கொரோனா' தொற்றாளருக்கான சேவையில் ஈடுபட்டு வந்த பஸ் கோர விபத்தில் சிக்கியது!

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளர்களைக் கொண்டு செல்ல இலங்கை இராணுவத்தினர் பயன்படுத்தும் தனியார் சொகுசு பஸ் ஒன்று கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளானது.

கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா நோக்கி அதிவேகமாகப் பயணித்த இந்த பஸ்ஸானது வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால் சாலையின் நடுவி 2



## கொழும்பில் 30 ஆயிரம் பேருக்கு கொரோனா தொற்றும் அபாயம்!

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எண்ணிக்கை 30 ஆயிரமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என கொழும்பு மாநகர சபை பிரதான சுகாதார மருத்துவர் ருவான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

எழுமாற்றாக இன்று மேற்கொள்ளப்பட்ட 400 பி.சி.ஆர். பரிசோதனைகளில் 19 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனடிப்படையில் நூற்றுக்கு 5 வீதமான தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த விகிதாசாரத்தின் அடிப்படையில் 30 ஆயிரம் பேர் வரையில் வைரஸ் தொற்றுடன் இருக்கலாம். எனினும், இந்தத் தொற்றாளர்களிடமிருந்து தொற்றுப் பரவுகின்றதா? அல்லது உடலிலே உள்ளதா? என்பதைத் தீர்மானிக்க முடியாது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பிள்ளையான் பொதுநிகழ்வில் பங்கேற்க முடியும் என்றால்

## அரசியல் கைதிகளை ஏன் விடுதலைசெய்ய முடியாது?

### அரசிடம் சிவாஜி கேள்விக்கணை

பிள்ளையான் சிறைச்சாலையிலிருந்து வெளியே அபிவிருத்தி அலுவலகத்தைத் திறக்க முடியுமாக இருந்தால் ஏன் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.



யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை சந்தேகத்தில் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) இன்று 2

ஈ.பி.டி.பியின் ஆளுகைக்குட்பட்ட

## வேலணை பிரதேச சபையின் 'பட்ஜட்' இன்று நிறைவேற்றம்

* கூட்டமைப்பு, ஐ.தே.க. எதிர்ப்பு
* உதயசூரியன் ஆதரவு
* முன்னணி நடுநிலைமை

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் (ஈ.பி.டி.பி) ஆளுகைக்குட்பட்ட யாழ்., வேலணை பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கால் இன்று நிறைவேற்றப் பட்டுள்ளது.



வேலணை பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்துக்கான விசேட கூட்டம் இன்று சபையின் தவிசாளர் ந.கருணாகரகுரு மூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 10 உறுப்பினர்களும், எதிராக 9 உறுப்பினர்களும் வாக்களித்த அதேவேளை ஓர் உறுப்பினர் நடுநிலைமை வகித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 2 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா ஒரு உறுப்பினர் என 10 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். 2

## கண்டி மாவட்டத்தில் 63 பேருக்கு தொற்று

### 900 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

கண்டி மாவட்டத்தில் மாத்திரம் இதுவரை 63 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கண்டி மாவட்ட அரச அதிபர் சந்தன தென்னக்கோன் இன்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கண்டி மாவட்ட பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் 20 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். 2

## இரத்தினபுரி மாவட்டத்தில் சதமடித்தது 'கொரோனா'

இரத்தினபுரி மாவட்டத்தின் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 100 ஆக அதிகரித்துள்ளது என மாவட்ட அரச அதிபர் மாலனீ லொகு போதாகம இன்று தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வரை 91 ஆகக் காணப்பட்ட கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை நேற்று திடீரென 9 ஆல் அதிகரித்துள்ளது எனவும் அவர் கூறினார். 2

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## இன்றும் மூன்று பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, பொலிஸ் மருத்துவ மனையில் சிகிச்சைபெற்றுவந்த பாணந்துறையைச் சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளார். அவர் கொரோனாத் தொற்றுக் காரணமாக ஏற்பட்ட மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என பிரேத பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## கொரோனா வைரஸிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இலங்கையில் 14 ஆயிரம் 716 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் 4 ஆயிரம் 489 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

## இளம் கைதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டின் கீழ் அவர் சிறைத்தண்டனை அனுபவித்து வந்தார் எனவும், உயிரிழந்தவரின் சடலம் அங்குனகொலபெலஸ்ச மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பெருந்தொகை கேரளக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் அடிப்படையில் மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துருக்கி சிட்டி பகுதிக்குச் சென்ற பொலிஸார் 7 கிலோ 815 கிராம் கேரளக் கஞ்சாப் பொதிகளுடன் 29 வயது இளைஞரைக் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று அறிவித்துள்ளது.

## 'கொரோனா' தொற்றாள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்த பாதுகாப்பு வேலியுடன் மோதி இந்த விபத்து ஏற்பட்டது.

கொழும்பிலிருந்து 24.7 கி.மீ. முதல் 24.9 கி.மீ. வரையான கட்டுநாயக்கா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே இந்த அனர்த்தம் நேற்றிரவு 10.05 மணியளவில் இடம்பெற்றது.

விபத்தில் பஸ் சாரதி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக நீர்கொழும்பு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான பஸ் பழுது பார்க்க முடியாதளவுக்கு சேதமடைந்துள்ளதுடன், விபத்தால் நெடுஞ்சாலைக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## அரசியல் கைதிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு அலுவலகத் திறப்பு விழாவுக்காக சிறைச்சாலையில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இந்த நிலைமை ஏன் தமிழ் அரசியல் கைதிகள் மீது காட்டப்படக்கூடாது?

அரசினுடைய ஆள்களுக்கு ஒரு நீதியும் ஏனையவர்களுக்கு ஒரு நீதியுமாக இந்த அரசு செயற்படுகின்றது. எனினும், இவ்வாறான சம்பவங்களை அரசு நிறுத்துவதோடு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் – என்றார்.

## பிரபல வானொலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, அந்த நிறுவனத்தின் நூலகம் அல்லது ஆவணக் காப்பகத்தில் பணியாற்றும் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் சிங்களவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, தமிழ், சிங்கள ஊடகங்களைச் சேர்ந்த நாடாளுமன்றச் செய்தியாளர்கள் ஐவருக்கு ஏற்கனவே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்டி மாவட்டத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய நிலையில் 900 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்து பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள், அதேபோன்று பொலிஸ், இராணுவம் மற்றும் பிரதேச செயலாளர்கள் இணைந்து குழுவொன்றை அமைத்து கொரோனா வைரஸ் மேலும் பரவாமலிருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் – என்றார்.

## வேலணை பிரதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினர் என 9 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர் நடுநிலை வகித்தார்.

20 உறுப்பினர்களைக் கொண்ட வேலணை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக 8 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக 6 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் 2 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக தலா ஓர் உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றனர்.

குறித்த பிரதேச சபையின் 2020, 2019ஆம் ஆண்டுகளுக்கான வரவு – செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரத்தினபுரி மாவட்டத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடயம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தொற்றாளர்கள் அனைவரும் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 5 கொரோனா சிகிச்சை நிலையங்களில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. 1,668 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 316 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் மினுவாங்கொடை பிரண்டிக்ஸ், கொழும்புத் துறைமுகம், பேலியகொட மீன் சந்தை என 8 குழுக்களாக வகுக்கப்பட்டு வெவ்வேறாகத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் – என்றார்.

# அரச கொள்கையின் அடிப்படையில் கொரோனாவை கையாள வேண்டும்

## இப்படிக் கூறுகின்றார் பிள்ளையான்



உலகளாவிய ரீதியில் சவாலாக இருக்கின்ற கொரோனா மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் வந்திருக்கின்றது. இதனை அரச கொள்கையின் அடிப்படையில் கையாண்டு சாதாரண மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய விடயங்களையும் எப்படி முன்னெடுப்பது என்ற பொதுவான கொள்கைத் திட்டத்துக்கு உழைக்க வேண்டும்.

– இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருக்கான காரியாலயத்தை மாவட்ட செயலகத்தில் இன்று சி.சந்திரகாந்தன் திறந்துவைத்து கடமைகளைப் பெறுப்பேற்ற பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளேன். இந்த இடத்துக்கு வருவதற்கு பெரும் பங்காற்றிய எனது மக்களுக்கு நன்றி. தேர்தல் காலங்களில் மக்களிடம் அபிவிருத்தி செய்து தருவாக வாக்குறுதியளித்துத்தான் இந்த இடத்துக்கு வந்திருக்கின்றோம்.

தற்போது உலகளாவிய ரீதியில் சவாலாக இருக்கின்ற கொரோனா மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் வந்திருக்கின்றது. இந்த விடயங்களை அரச கொள்கையின் அடிப்படையில் கையாண்டு சாதாரண மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் அவர்களுடைய உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய விடயங்களையும் எப்படி முன்னெடுப்பது என்ற பொதுவான கொள்கைத் திட்டத்துக்கு உழைக்க வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு.

அந்த அடிப்படையில் கொரோனாத் தொற்றைத் தடுத்து மக்களைப் பாதுகாத்துக்கொண்டு அதனோடு எங்களுடைய கிராமிய பொருளாதாரத்தை வளர்தெடுப்பது எங்கள் நோக்கம். அந்தத் திட்டத்துக்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன்.

நீண்டகாலமாக நான் நிர்வாகத்துடன் தொடர்பு இல்லாத காரணத்தால் இன்று கடமைகளைப் பெறுப்பேற்றவுடன் நிலைமைகளை அவதானித்துக் கொண்டு நாளை பெரும் விமர்சனத்தின் மத்தியில் மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தை நடத்தவுள்ளோம்.

அந்தக் கூட்டத்தில் முடிந்த வரை 2021ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகளையும் இப்போது இருக்கின்ற மக்களுக்கு உடனடித் தேவையான விடயங்களையும் அவதானித்து அதனை முடித்துக்கொடுப்பதற்கான திட்டங்களை வகுப்போம் – என்றார்.

## விவசாயி வயலில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளமையுடன் பிரேத பரிசோதனைக்காக சடலம் மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொரோனா எதிர்ப்பில் ஐக்கியம்

**பெரும் கொள்ளை நோயாகத் தாக்கியிருக்கும் கொரோனா வைரஸின் பாதிப்பு அடுத்து வரும் நாள்களில் மேலும் உக்கிரமடையலாம்.**

**அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ஹரித் அளுத்கே இப்படி எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.**

**கொரோனாத் தொற்று மோசமாகப் பரவிய நாடுகளில் ஏற்பட்டமை போன்று இங்கும் இனிமேல் கொரோனா மரணம் அதிகரிக்கலாம் என்றும் –**

**ஆஸ்பத்திரிகளில் மட்டுமல்லாமல் வீடுகளிலும் அந்த அவச்சாவுகள் நேரும் சாத்தியம் உண்டு என்றும் –**

**அவர் கூறியிருக்கின்றமை யதார்த்தத்தில் நடக்கத் தொடங்கியுள்ள விடயமாகவே தென்படுகின்றது.**

**கொரோனா மரணங்கள் இலங்கையில் குறைவுதான் என்று இறுமாந்திருந்தோம். உலகளாவிய ரீதியில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியவர்களில் இரண்டு வீதத்தினர் மரணிப்பது புள்ளவிவரமாக உள்ளது. இலங்கையில் அது ஆக, 0.2 வீதமாகவே இருந்து வந்தது. இது ஓரளவுக்குத் திருப்தியான நிலைமையாகவும் காணப்பட்டது. ஆனால், இந்த வீதத்தைத் திடீரென உயரச் செய்யும் விதத்தில் சடுதியாக கொரோனா மரணங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.**

**அதுமட்டுல்ல, பல கொரோனா மரணங்கள் வீடுகளுக்குள்ளேயே நிகழுகின்றன. மரணித்தவர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. மரணத்தின் பின்னர் உடற்கூற்றியல் பரிசோதனையின் போதுதான் அந்நபருக்குத் தொற்று ஏற்பட்டிருந்தது தெரிய வருகின்றது எனத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.**

**இது ஒரு பேராபத்தான நிலைமையாகும். தொற்று ஏற்பட்டுள்ள பலரும் வீடுகளில் இருக்கின்றார்கள். சாதாரண வாழ்க்கை வாழ்கின்றார்கள். தமக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்பதை உணரும் நிலையில் கூட அவர்கள் இல்லை. பலருக்கு அவர்கள் இறந்த பின்னர்தான் அவர்கள் தொற்றுக்கு இலக்காகியிருந்தனரோ என்று சந்தேகப்படும் சூழல் வருகின்றது.**

**இத்தகைய நிலைப்பாடு, சமூகத் தொற்றையும் கூடத் தாண்டியது, விரிவான ஆபத்துக்களைக் கொண்டது என்பதை அடித்துக் கூற முடியும்.**

**இப்படி ஆபத்தான கட்டத்தை எட்டியிருக்கும் கொரோனாத் தொற்று விவகாரத்தில் நமது நாட்டின் அணுகுமுறையோ அல்லது அதைக் கையாளும் முறைமையோ சந்தேகத்துக்கு உரியதாக – கவலை தருவதாக – அமைந்திருப்பதுதான் வேதனையிலும் வேதனை.**

**கொரோனாவைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தை அரசுத் தலைமைக்கு அப்பால் இங்கு சுகாதார, மருத்துவ அதிகாரிகள், படையினர், பொலிஸ் மற்றும் அரச அதிகாரிகள் முன்னெடுக்கின்றனர்.**

**ஆனால் அத்தகைய தரப்புகளுக்குள் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட இணக்கமான கருத்து நிலை ஏதும் இல்லை.**

**அது மாத்திரமல்ல, இவ் விடயங்களைக் கையாளும் – கையாள வேண்டிய – தரப்புகளுக்கு இடையில் எதிரெதிர் கருத்து நிலைகளும் இருக்கின்றமைதான் பெரும் துரதிஷ்டமாகும்.**

**கொரோனத் தொற்றைக் கையாளும் விடயத்தில், மிக நவீன தேசம் என்று கருதப்படும் அமெரிக்காவிலேயே முரணிலைத் தோற்றம்தான் அதிகமாகப் பிரதிபலிக்கப்படுகின்றது.**

**கொள்ளை நோய்த் தொற்றைக் கையாள்வது எப்படி என்பதில் அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் அவரது குடியரசுக் கட்சி நிர்வாகமும் கொண்டுள்ள நிலைப்பாட்டுக்குத் தலைகீழான கருத்து நிலைப்பாட்டை எதிர்த்தரப்பில் – விரைவில் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்கவிருக்கும் – ஜோ பைடனும் அவரது ஜனநாயக கட்சியினரும் கொண்டிருப்பது வெளிப்படையானது.**

**அதே நிலைமைதான் இங்கும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது அரசும் கொரோனாத் தொற்றைக் கையாளும் முறைமை தவறு என்றும், நாட்டை முழுமையாக முடக்கி வேறு விதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் அவரது ஐக்கிய மக்கள் சக்தியினரும் வலியுறுத்துகின்றனர்.**

**அமெரிக்கா என்றாலும், இலங்கை என்றாலும், அரசியல் தலைவர்கள் அப்படி நாக்கைப் புரட்டிப் போட்டுத்தான் பேசுவார்கள் என்று விட்டு விடலாம்.**

**ஆனால், கொரோனாத் தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் மருத்துவ மற்றும் சுகாதாரத் துறைகளைச் சேர்ந்த நிபுணத்துவ வட்டாரங்கள் முரணிலைக் கருத்துக்களை வெளியிட்டு, கருத்தியல் ரீதியில் முட்டி, மோதி நிற்கின்றனமை பெரும் மனக்கிலேசத்தை மக்கள் மத்தியில் தந்திருப்பது அவதானிக்கப்படுகின்றது.**

**கொரோனாத் தொற்றுத் தடுப்புத் தொடர்பாக அரசும் சுகாதாரத் துறையினரும் எடுக்கும் நடவடிக்கைகளில் பல குறைபாடுகள், பின்னடைவுகள், தவறுகள் இருக்கின்றன என்றும், அவற்றினால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் உட்பட இத்துறையில் நிபுணத்தும் வாய்ந்த தரப்புகள் சுமத்தும் குற்றச்சாட்டுகள் அவதானிக்கப்பட வேண்டியவையாக உள்ளன.**

**உலகுக்கே பொது எதிரியாய் விஸ்வரூபம் எடுத்திருக்கும் கொரோனா வைரஸை ஒன்றுபட்டு எதிர்ப்பதன் மூலமே சற்றேனும் அடக்க முடியும் என்பதால், இது விடயத்தில் துறைசார்ந்த நிபுணர்களின் வலுவான ஆலோசனைகளைக் கவனத்தில் கொண்டு, கூட்டுத் தீர்மானங்களாக நடவடிக்கைகளை எடுக்க முனைவதே சிறந்தது. அதனை ஆட்சித் தரப்பு கவனத்தில் கொள்ள வேண்டும்.**

## மாவட்ட ஒருங்கிணைப்புக் காரியாலயம் மட்டக்களப்பில் பிள்ளையானால் திறப்பு!



மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் காரியாலம் மாவட்ட செயலகத்தில் இன்று (புதன்கிழமை) நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடு தலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிலையில் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வரும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுகூட்டத்தில் பங்கேற்பதற்காக நீதிமன்ற அனுமதியைக் கோரியிருந்த நிலையில் அதற்கான அனுமதி நேற்று (செவ்வாய்க்கிழமை) நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது

இதனையடுத்து இன்றைய தினம் மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருக்கான காரியாலம் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சந்திரகாந்தன் அதிதியாகக் கலந்து கொண்டார். சமயகிரிகைகளுடன் காரியாலம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன், உதவி அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## லேடி றிஜ்வே வைத்தியசாலையில் 56 பேருக்குத் கொரோனா தொற்று!

கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இதுவரையில் 56 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் 46 பேர் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் அடங்குகின்றமையுடன், ஏனைய 10 பேரில் 05 வைத்தியர்கள், 02 தாதியர்கள் மற்றும் 03 சிற்றூழியர்கள் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர்கள் அனைவரும் ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதேநேரம் மேலும் 90 வைத்தியசாலை ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு வைத்தியசாலைக்கு வருபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த தீர்மானித்துள்ளதாகக் கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ஜீ. விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

## 401 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 401 இலங்கையர்கள் மூன்று விமானங்களில் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அதன்படி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 50 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு வேலை வாய்ப்புக்காகச் சென்ற 275 இலங்கையர்கள் இன்று அதிகாலை 5.40 மணியளவில் நாட்டை வந்தடைந்தனர்.

மேலும் ஐ.நா. அமைதி காக்கும் படைகளில் பணியாற்றுவதற்காக பல்வேறு ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்ற 76 இலங்கை இராணுவ வீரர்களும் எத்தியோப்பிய ஏயர்லைன்ஸ் மூலமாக அதிகாலை நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர்களை தனிமைப் படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் சிக்கித் தவித்த 66 இலங்கையர் திரும்பினர்

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக இந்தியாவில் சிக்கியிருந்த 66 இலங்கையர்கள் இன்று (புதன்கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

ஸ்ரீ லங்கன் விமான சேவைகளுக்குச் சொந்தமான விசேட விமானத்தின் ஊடாக அவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்து பீ.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, அவர்கள் அனைவரையும் தனிமைப் படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கொரோனாத் தொற்றாளரை கொழும்பிலிருந்து திருமலைக்கு காரில் அழைத்து வந்த வைத்தியர்!

வைத்தியர் ஒருவரால் கொழும்பிலிருந்து திருகோணமலையில் நடைபெற்ற மரணச் சடங்குக்கு அழைத்துவரப்பட்ட நபர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதால் திருகோணமலையில் 18 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியருவதாவது:–

திருகோணமலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மரணச் சடங்கு ஒன்று நடைபெற்றிருந்தது. அந்த நிகழ்விற்கென கொழும்பில் கொரோனா அறிகுறிகளுடன் காணப்பட்ட நபர் ஒருவர் வைத்தியர் ஒருவரின் காரில் அழைத்துவரப்பட்டிருந்தார். குறித்த நபருக்கு கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் காணப்பட்டிருந்த நிலையில் அவருக்கு கொழும்பில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சோதனை முடிவுகள் வெளிவர முன்பாகவே அந்நபரை வைத்தியர் திருகோணமலைக்கு அழைத்து வந்திருக்கின்றார்.

திருகோணமலைக்கு வந்த அந்நபர், மரணச் சடங்குகளில் மூன்று மணி நேரமாக பங்குகொண்டிருந்திருக்கின்றார்.

இந்நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கொழும்பில் சுகாதாரத் துறையினர் அவரைத் தொடர்புகொள்ள முயற்சித்திருக்கின்றனர்.

அதன் பின்னரேயே அவர் வைத்தியரால் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தமை தெரியவந்திருக்கின்றது.

இதனை அடுத்து திருகோணமலை சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் மரண வீட்டில் பங்கேற்றவர்கள் 18 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களை சுயதனிமையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நபர் ஒருவரை வைத்தியர், தான் வைத்தியர் என்ற அடையாளத்தைப் பயன்படுத்தி, பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கடந்து ஒரு மரண நிகழ்விற்கு அழைத்துவந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# கிழக்கு லடாக்கில் தற்போது ஒரு நிலைத் தன்மை உள்ளது

**இராணுவத் தளபதி**



கிழக்கு லடாக்கில் உள்ள எல்லையில் தற்போது ஒரு நிலைத்தன்மை காணப்படுவதாக இராணுவத் தளபதி எம்.எம்.நரவணே தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு மற்றும் இராணுவ விவகாரங்களைக் கையாளும் இணையத்தளம் ஒன்று நடத்திய கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர், கட்டுப்பாட்டு எல்லையில் பதற்றத்தைக் குறைப்பதற்கான பேச்சுகளில் இந்திய – சீன இராணுவ கொமாண்டர்கள் தொடர்ந்து பேசி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

பதற்றத்தை தணிப்பதற்கான முடிவுகள் இந்த பேச்சுகளின் வாயிலாக எட்டப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இருதரப்பு கொமாண்டர்கள் மட்டத்திலான எட்டாவது சுற்று பேச்சு நடந்தது. அதில் இரு நாடுகளும் படைகளை விலக்கிக்கொள்ள ஆக்கபூர்வமான பேச்சுகளை மேற்கொள்ள வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு நாட்டின் இறையாண்மையை ஏனைய நாடுகள் மதிக்க வேண்டும்

**பிரதமர் மோடி வலியுறுத்து**



குறிப்பிட்ட நாட்டின் இறையாண்மையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் மற்ற நாடுகள் மதித்து நடக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் காணொளிவாயிலாகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர் –

இந்தியா ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளுடன் கலாசார ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் நல்லுறவைப் பேணி வருகிறது.

மற்ற நாடுகளின் இறையாண்மையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் மதித்து வளர்ச்சிப் பாதையில் ஒருங்கிணைந்து முன்னேறுவதை நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

தற்போதைய சூழலில் உலக நாடுகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன. அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு அதிகரிக்க வேண்டும். அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவு பெற்று உலக நாடுகளின் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கு இந்தியா உறுதுணையாக இருக்கும்.

கொரோனா நோய்த்தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் இந்தியா முன்னின்று வருகிறது. இத்தகைய இக்கட்டான சூழலில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களை 150 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இந்தியா விநியோகம் செய்துள்ளது. எனத் தெரிவித்துள்ளார்.

# அமெ. துணை ஜனாதிபதி கமலாவின் வெற்றி சொந்த ஊரான திருவாரூரில் கொண்டாட்டம்!






அமெரிக்க துணை ஜனாதிபதி தேர்தலில் கமலா ஹாரிஸ் வெற்றி பெற்றமையால், அவரது பூர்வீக கிராமமான திருவாரூர் மாவட்டம், பைங்காநாடு, துளசேந்திரபுரம் மக்கள் மிகுந்த மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் இருந்து வருகிறார்கள். இனிப்புகள் வழங்கியும், பட்டாசுகள் வெடித்தும், தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகிறார்கள். இதனால் ஊரே உற்சாகத்தில் திளைத்துக்கொண்டிருக்கிறது.

அமெரிக்க துணை ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹாரிஸ் அறிவிக்கப்பட்டதிலிருந்தே இந்தப் பகுதி மக்கள் மிகுந்த பெருமித கொண்டாட்டத்தில் இருந்து வந்தார்கள். இவரின் தாய்வழித் தாத்தா கோபாலன் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர் என்ற தகவல் வெளியானதால் நெகிழ்ச்சியில் ஆழ்ந்தார்கள். 90 ஆண்டுகளுக்கு முன்பு இங்குள்ள அக்ரஹாரத் தெருவில் வாழ்ந்திருக்கிறது கோபாலனின் குடும்பம். ஆங்கிலேய ஆட்சியில் சிவில் சேவை அதிகாரியாகப் பணியாற்றிய கோபாலன், சென்னைக்குக் குடிபெயர்ந்திருக்கிறார்.

கமலா ஹரிஸ் வெற்றிக்காக பூஜை நடத்திய மக்கள் அவரின் மூத்த மகள் சியாமளா, மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றிருக்கிறார். ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த ரொனால்ட் ஜெ ஹரிஸைத் திருமணம் செய்திருக்கிறார். இவர்களின் மகள்தான் கமலா ஹாரிஸ். அரசியல், பொருளாதாரம், சட்டம் எனப் பலதுறைகளில் பட்டம் பெற்ற கமலா ஹாரிஸ், கலிஃபோர்னியா தலைமை வழக்கறிஞர், செனட் உறுப்பினர் எனப் படிபடியாக உயர்ந்து, தற்போது அமெரிக்கத் துணை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கமலா ஹரிஸுக்கும் பைங்காநாடு, துளசேந்திரபுரத்துக்கும் என்ன சம்பந்தம் பல ஆண்டுகளுக்கு முன்பு இவரது தாத்தா இங்கு வாழ்ந்திருக்கிறார். அவர் இங்கிருந்து சென்று நீண்டகாலம் ஆகிவிட்டது. அப்படியிருக்கும் போது கமலா ஹாரிஸின் வெற்றியை ஏன் இந்தப் பகுதி மக்கள் இவ்வளவு சந்தோஷமாகக் கொண்டாட வேண்டும் எனச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். கமலா ஹாரிஸ் அமெரிக்காவில் வசித்தாலும்கூட, அவருக்கும் துளசேந்திரபுரம் கிராமத்துக்கும் இடையேயான பந்தம் தற்போது வரை நீடித்துக்கொண்டுதான் இருக்கிறது.

கோயில் கல்வெட்டில் கமலா ஹரிஸ் பெயர் இங்குள்ள இவரது குலதெய்வ கோயிலான ஸ்ரீதர்மசாஸ்தா ஸ்ரீசேவகப் பெருமாள் கோயில் கல்வெட்டில் நன்கொடையாளர்கள் பட்டியலில் கமலா ஹரிஸின் பெயரும் இடம்பெற்றிருக்கிறது. 2014ஆம் ஆண்டு இந்தக் கோயிலுக்கு 5,000 ரூபா நன்கொடை கொடுத்திருக்கிறார் கமலா ஹரிஸ். தங்கள் கிராமத்தை பூர்வீகமாகக்கொண்ட பெண், அமெரிக்க துணை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டமையை மிகவும் பெருமிதமாகக் கருதிய பைங்காநாடு துளசேந்திரபுரம் மக்கள், ஊர் முழுவதும் பல இடங்களில் வாழ்த்து பதாதைகள் வைத்துக் கொண்டாடினார்கள்.

கமலா ஹரிஸ் வெற்றி பெற இங்கிருக்கும் ஸ்ரீதர்ம சாஸ்தா ஸ்ரீசேவகப்பெருமாள் கோயிலில் ஊர்மக்கள் ஒன்றாகக் கூடி, சிறப்பு பூஜை மற்றும் அன்னதானம் நடத்தினார்கள். வீடுகளின் முன்பு வாழ்த்துக்கோலம் இட்டார்கள்.

# பைஸர் கொரோனா தடுப்பூசியை இந்தியாவுக்கு விற்கப் பேச்சுகள்!




தனது கொரோனா தடுப்பூசியை இந்தியாவுக்கு விற்பதற்கான பேச்சில் ஈடுபட்டுள்ளதாக பன்னாட்டு மருந்து நிறுவனம் பைஸர் தெரிவித்துள்ளது.

சுயே வேக்சின் என்ற இந்த தடுப்பூசி, இறுதி கட்ட சோதனையில் 90 சதவிகிதம் அளவுக்கு திறன் வாய்ந்தது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆனால் மைனஸ் 75 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் வைத்து மட்டுமே இந்த தடுப்பூசியை பயன்படுத்த முடியும் என்பது ஒரு சவாலாகக் கருதப்படுகிறது.

தடுப்பூசியின் இறுதிக்கட்ட சோதனை தொடர்பாகப் பாதுகாப்பு விவரங்கள் அடுத்த வாரம் கிடைக்கும் எனக் கூறப்படும் நிலையில், டிசெம்பரில் அமெரிக்கர்களுக்கு ஃபைசரின் தடுப்பூசி போடப்படும் என சுகாதார அமைச்சர் அலக்ஸ் அசார் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் இந்தியாவில் இந்தத் தடுப்பூசியைப் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான பேச்சும் நடைபெற்று வருகிறது.

# இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை ஜோ பைடன் இறுதி செய்ய வேண்டும்!

**தொழிலதிபர்கள் கோரிக்கை**

அமெரிக்க அதிபராக பொறுப்பேற்க உள்ள ஜோ பைடன் இந்தியா உடனான வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்து பரஸ்பர நல்லுறவு தொடரும் என்ற அறிகுறியை வெளிப்படுத்த வேண்டும் என அமெரிக்கா வாழ் இந்திய தொழிலதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அமெரிக்க – இந்திய திட்டம் மற்றும் கூட்டுறவு கூட்டமைப்பின் தலைவர் முகேஷ் அகி, அமெரிக்கா – இந்தியா இடையிலான பரஸ்பர நல்லுறவு தொடர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இரு நாடுகளும் ஏற்கனவே பேசி தீர்வு கண்ட சிறிய அளவிலான வர்த்தக ஒப்பந்தத்தை ஜோ பைடன் இறுதி செய்ய வேண்டும் எனவும் அதன் பின்னர் பெரிய அளவிலான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாகப் பேச்சு நடத்தலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வளரும் நாடுகளுக்கான வர்த்தகப் பொருள்கள் முன்னுரிமை அந்தஸ்தை இந்தியாவுக்கு மீண்டும் வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் வளரும் நாடுகளுக்கான வர்த்தகப் பொருள்கள் முன்னுரிமை அந்தஸ்து பட்டியலில் இருந்து இந்தியாவை நீக்கினார்.

தங்களின் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப பொருள்களுக்கு இறக்குமதி வரியை குறைக்கும்படி அமெரிக்கா தெரிவித்தது. அத்துடன் வேளாண் மற்றும் பண்ணைப் பொருள்கள், வாகன உதிரிபாகங்கள் போன்றவற்றின் இறக்குமதியை அதிகரிக்கவும் வலியுறுத்தியது. இது தொடர்பாக இந்தியா – அமெரிக்கா இடையே பேச்சு நடைபெற்றது.

இதில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டமையை அடுத்து அமெரிக்க அரசியல் சூழல் அனுமதித்தால் விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என மத்திய வர்த்தக அமைச்சர் பியுஷ் கோயல் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகள் விபரம்
பிறந்த திகதி – 1983.02.26
மதம் – இந்து A ஆசாரி
நட்சத்திரம் – மகம்
பாவம் – 44 1/4
கல்வி – AL
தொழில் – அமெரிக்கா PR வியாபாரத்துறையைவர்
எதிர்பார்ப்பு – படித்த அழகான பெண்.

மணமகள் விபரம்
பிறந்த திகதி – 1994.04.19
மதம் – இந்து A ஆசாரி
நட்சத்திரம் – பூசம்
பாவம் – 50
செவ் – 1 இல் 32 புள்ளி
கல்வி – கனடா பட்டதாரி
தொழில் – கனடா PR
எதிர்பார்ப்பு – சமமான ஆங்கிலப் புலமையும் பட்டதாரி மணமகன் தேவை.

Kalyanamalai Vada.com திணைக் முகவரியிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முகவரியிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

வட அலுவலகம், சந்தை வீதி, இளையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# கசப்பான ஆட்சியிலிருந்து அமெரிக்காவுக்கு விடுதலை!



தோல்வியை ஒப்புக் கொள்ள அதிபர் ட்ரம்ப் மறுப்பது மிகப்பெரிய சங்கடத்தை ஏற்படுத்தி வருவதாக அமெரிக்காவின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பைடன் சாடியுள்ளார்.

வில்மிங்டன் டெலவேரில் உரை நிகழ்த்திய ஜோ பைடன், ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதை அமெரிக்க மக்கள் புரிந்துக் கொண்டுள்ளனர் என்றும் ஜனவரி 20 ஆம் திகதி தாம் பதவியேற்கும் போது சிக்கல் தீர்ந்துவிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப்பை நம்பி வாக்களித்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றத்தை தாம் உணர்ந்திருக்கிறார் எனவும் அவர்களையும் இணைத்துக் கொண்டு கடந்த ஆறேழு ஆண்டுகளாக நடைபெற்ற கசப்பான ஆட்சியிலிருந்து அமெரிக்காவை விடுவிக்க முடியும் என்றும் ஜோ பைடன் நம்பிக்கைத் தெரிவித்தார்.

## தேர்தல் முடிவடைந்து முடிவு அறிவித்தபின் தந்தைக்கு வாக்கு கோரும் ட்ரம்பின் மகன்!



அமெரிக்க அதிபர் தேர்தல் முடிந்து, முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையில், மக்களை வாக்களிக்க வலியுறுத்தி டொனால்ட் ட்ரம்பின் மகன் எரிக் ட்ரம்ப் டுவிட்டரில் பதிவிட்டமை கேலிக்குள்ளாகி வருகிறது.

நவம்பர் 3 ஆம் திகதியே வாக்குப்பதிவு நடந்து முடிந்த நிலையில், நேற்று எரிக் ட்ரம்பின் டுவிட்டர் பக்கத்தில் 'மினசோட்டா மாகாண மக்களே, வெளியே சென்று வாக்களியுங்கள்' என்ற பதிவு வெளியானது.

இது சில நிமிடங்களில் நீக்கப்பட்டபோதும், அதற்குள்ளாக ஸ்கிரீன்சொட் எடுத்த நெட்டிசன்கள் அதை சமூக வலைதளங்களில் பகிர்ந்து, எரிக் ட்ரம்பை கேலி செய்து வருகின்றனர்.

## கொரோனாத் தொற்று பாதித்துக் குணமடைந்த 20 சதவீதத்தினருக்கு 90 நாள் மனக்கோளாறு!

### ஏற்படும் என்கின்றனர் உளநல மருத்துவ நிபுணர்கள்

கொரோனாவால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களில் 20 சதவீதம் பேருக்கு 90 நாள்களுக்குள் மனநலக் கோளாறு ஏற்படும் அபாயம் இருப்பதாக மனநல மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக தி லான்செட் சைக்காட்ரி ஜர்னலில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரையில், அமெரிக்காவைச் சேர்ந்த 6 கோடியே 90 லட்சம் மக்களின் மின்னணு சுகாதார பதிவுகள் சோதனை செய்யப்பட்டுள்ளன என்றும் அதில் 62 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனா நோயாளிகளின் பதிவுகளும் அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் கொரோனாவில் இருந்து தப்பிப் பிழைத்த ஐந்தில் ஒருவர் மன நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய நோயாளிகளுக்கு கவலை, மனச்சோர்வு மற்றும் தூக்கமின்மை போன்றவை இருக்கும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

## கொரோனாவால் வேலையிழந்த விமானி நூடில்ஸ் கடை ஆரம்பித்து பிரபல்யம்!



மலேசியாவில் கொரோனா அச்சுறுத்தலால் வேலை இழந்த விமானி ஒருவர், நூடில்ஸ் கடை ஒன்றை ஆரம்பித்து பிரபலமடைந்துள்ளார்.

கொரோனா கட்டுப்பாடுகளால் மலிண்டோ ஏர் விமான நிறுவனம் தனது 2 ஆயிரம் ஊழியர்களை பணியில் இருந்து நீக்கியது. 4 குழந்தைகளுக்கு தந்தையான விமானி அஸ்ரின் மொஹமட் சவாவியும் இதில் வேலையிழந்த நிலையில், சற்றும் மனம் தளராமல் தலைநகர் கோலாலம்பூரில் சிறிய நூடில்ஸ் கடை ஒன்றை ஆரம்பித்து உள்ளார்.

விமான கப்டனின் வெள்ளை சீருடையுடன் பணிக்கு வரும் அஸ்ரின் இணையத்தில் வைரலான நிலையில், அவரின் நூடில்ஸ் கடை சிறப்பு கவனம் பெற்றுள்ளது.

## அல் - குவைதாவின் முக்கிய தளபதி பலி!

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க, ஆப்கானிய கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதலில் அல் குவைதா அமைப்பின் முக்கிய தளபதி கொல்லப்பட்டார்.

இதுதொடர்பாக ஆப்கானிஸ்தான் அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், பாகிஸ்தானைச் சேர்ந்த முகம்மது ஹனிப் என்பவர் தலிபான்களுக்கும், அதனைத் தொடர்ந்து அல் கொய்தா அமைப்பினருக்கும், வெடிகுண்டுகளை தயாரிப்பது, குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்க வைப்பது போன்ற யுத்திகளை கற்றுக் கொடுத்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவர் கொல்லப்பட்டு விட் டபப் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நீண்ட காலமாகப் பதவிவகித்த பஹ்ரைன் பிரதமர் 84 ஆவது வயதில் காலமானார்!



உலகின் மிக நீண்ட காலம் பணியாற்றிய பஹ்ரைன் பிரதமர் கே் கலீஃபா பின் சல்மான் அல் கலீஃபா தனது 84 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார் என அரச மாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் மாயோ கிளினிக் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பிரதமர், இன்று புதன்கிழமை காலை காலமானார் என்று பஹ்ரைன் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

## கொரோனா வைரஸைக் கொல்லும் கருவியைக் கண்டுபிடித்தது அமெ!

*அமெரிக்காவில் கொரோனா வைரஸைக் கொல்வதற்கான கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.*


*டெக்ஸாஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ள இந்தக் கருவிக்கு நானோ வேவ் டிவைஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.*

*குறிப்பிட்ட அறையில் வைக்கப்படும் இந்த கருவி கிட்டத்தட்ட 300 லிட்டர் காற்றை உள்ளிழுத்து புற ஊதாக் கதிர்களால் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் காற்றை வெளியிடுகிறது.*

*இதனால் காற்றில் பரவும் அனைத்து வகையான வைரஸ்களும் உள்ளிழுக்கப்பட்டு கொல்லப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

*நொடிக்கு 2 ஆயிரம் கிருமிகளைக் கொல்வதாக தெரிவித்துள்ள அவர்கள் இதன் மூலம் 99 புள்ளி 99 விழுக்காடு காற்று சுத்திகரிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.*

# ஆர்மீனியா - அசர்பைஜான் போர் முடிவுக்கு வந்தது!



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தலைமையில் காணொளிக் காட்சி மூலம் ஆர்மீனியா – அசர்பைஜான் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இரு தரப்பும் உடனடியாக சண்டையை நிறுத்த ஒப்புக்கொண்டன.

மேலும், தாங்கள் கைப்பற்றிய நகோர்னோ – கராபத் மாகாணத்தின் முக்கிய பகுதிகளை அசர்பைஜான் தங்கள் வசமே வைத்துக்கொள்ள முடிவு செய்துள்ளது.

இதன் மூலம் பல வாரங்களாக நடந்த போரில் ஆர்மீனியா தோல்வியடைந்து அசர்பைஜான் வெற்றிபெற்றதாகவே தெரியவந்துள்ளது.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் மோதல் ஏற்படாமல் இருக்க ரஷ்ய படைகள் நகோர்னோ – கராபத் மாகாணத்தில் இருநாட்டு எல்லைகளைப் பிரிக்கும் பகுதிகளில் குவிக்கப்படுகின்றன.

இந்த அமைதி ஒப்பந்தம் ஏற்பட்ட சில மணி நேரங்களில் ரஷ்ய படைகள் அமைதியை நிலைநிறுத்தும் வகையில் நகோர்னோ – கராபத் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆர்மீனியா, அசர்பைஜான் நாடுகளுக்கு இடையேயான எல்லை நகரமான நகோர்னோ – கராபத் மாகாணத்தின் முக்கிய நகரங்களை அசர்பைஜான் படையினர் கைப்பற்றினர்.

இந்த மாகாணம் அசர்பைஜானின் பகுதி என சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட போதும் 1994 ஆம் ஆண்டு முதல் இரு நாடுகளுக்கும் இடையே நடந்த போரில் மாகாணத்தின் பெரும் பகுதியை ஆர்மீனியா கைப்பற்றியது.

அன்றில் இருந்து நகோர்னோ – கராபத் மாகாணத்தை மையமாகக் கொண்டு பல ஆண்டுகளாக அர்மீனியா – அசர்பைஜான் இடையே மோதல்கள் அரங்கேறி வருகின்றன. பல ஆண்டுகளாக சற்று தணிந்திருந்த பதற்றம் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் மீண்டும் ஆரம்பமாகியது.

இதனை அடுத்து ஆர்மீனியாவுக்கு ஆயுத ரீதியில் ரஷ்யா ஆதரவு அளித்த போதும் நேரடியாக களத்தில் இறங்காமல் இந்த சண்டையை முடிவுக்கு கொண்டுவர மூன்று முறை அமைதி ஒப்பந்தம் போடப்பட்டது.

ஆனால், தொடர்ச்சியான மோதல்களால் அமைதி ஒப்பந்தங்கள் தோல்வியில் முடிந்தன. இதையடுத்து, அசர்பைஜான் – ஆர்மீனியா இடையே கடந்த சில நாள்களாக கடுமையான மோதல் நிலவி வந்தது.

இதற்கிடையில், நகோர்னோ – கராபத் மாகாணத்தில் உள்ள முக்கிய மற்றும் இரண்டாவது மிகப்பெரிய நகரமான சுஜு என்ற நகரை அசர்பைஜான் படைகள் கைப்பற்றின.

இதையடுத்து, 6 வாரங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த போர் இறுதிக் கட்டத்தை எட்டியதுடன் நகோர்னோ – கராபத் மாகாணத்தின் முக்கிய நகரை கைப்பற்றியமையையடுத்து, போரில் தாங்கள் வெற்றி பெற்று விட்டனர் என அசர்பைஜான் அறிவித்தது.

## அமெரிக்கா - ஜேர்மன் இணைந்து தயாரித்த கொரோனா தடுப்பு மருந்து 90 வீதம் வெற்றி

அமெரிக்காவின் பைஸர் மற்றும் ஜேர்மனியின் பயோன்டெக் நிறுவனங்கள் இணைந்து உருவாக்கியுள்ள கொரோனா வைரஸ் தடுப்பூசி 90 சதவீதம் பலனளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முன்னணி மருந்து தயாரிப்பு நிறுவனமான பைஸர் மற்றும் ஜேர்மனியின் பயோன்டெக் நிறுவனங்கள் இணைந்து உருவாக்கியுள்ள கொரோனா வைரஸ் தடுப்பூசி 90 சதவீதம் பலனளிப்பதாக பைஸர் நிறுவன தலைவர் அல்பர்ட் போர்லா தெரிவித்துள்ளார்.

முதல் முறை தடுப்பூசி செலுத்தப்பட்டு 28 நாள்களுக்கு பிறகும், இரண்டாவது முறை இரண்டு டோஸ்கள் செலுத்தப்பட்ட 7 நாள்களுக்குப் பிறகும் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகியுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் மூன்றாம் கட்ட சோதனையில் பங்கேற்றவர்களின் முதல் தொகுப்பு முடிவுகளில் கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் இந்த தடுப்பூசி கொரோனாவை தடுக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய சுகாதார நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவும் முயற்சியில் தாங்கள் குறிப்பிடத்தக்க கட்டத்தை எட்டியிருப்பதாகவும், உலகமே இதனை எதிர்நோக்கி இருக்கும்போது, தடுப்பூசி மேம்பாட்டு திட்டத்தில் தாங்கள் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# விசேட சமூக அபிவிருத்தி திட்டத்துக்கான இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்து





இந்திய நிதியுதவியின் கீழ் இலங்கை மதிப்பில் 60 கோடி ரூபாவுக்கும் அதிகமான செலவில் இலங்கையில் செயற்படுத்தப்படும் சமூக அபிவிருத்தி திட்டத்துக்காக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தமானது 2005 ஆம் ஆண்டு தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக சேவையாற்றிய காலப்பகுதியில் கைச்சாத்திடப்பட்டது என்பதுடன் அது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை நீடிக்கப்பட்டு கையெழுத்தாகின்றது.

இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவின் பங்கேற்புடன் விஜேராமவிலுள்ள பிரதமரின் இல்லத்தில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக விசேட அபிவிருத்தித் திட்டத்துக்கான செலவு 30 கோடி ரூபாவுக்கு அதிகமாவதுடன் அவசரகால அம்புலன்ஸ் சேவை, வீடமைப்புத் திட்டம், புதிய யாழ். கலாசார மத்திய நிலைய செயற்பாடுகள் என்பன இதனூடாகச் செயற்படுத்தப்பட உள்ளன.

சிறு அபிவிருத்தி திட்டத்திற்காக அதிகபட்சமாக 30 கோடி ரூபா செலவிடப்படுவதுடன், மீள் குடியேற்றம், தங்குமிடம், வாழ்வாதாரம், வேலை வாய்ப்பு, பெண்களுக்கு அதிகாரமளிக்கும் தொழிற் பயிற்சி, கல்வி மற்றும் ஆராய்ச்சி, கலாசார நடவடிக்கை, விளையாட்டு, தொழிற்துறை மேம்பாடு, மருத்துவ நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வைத்திய உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல் என்பனவும் இதன் கீழ் செயற்படுத்தப்படவுள்ளன.

தற்போது செயற்பாட்டிலுள்ள இந்தத் திட்டம் புதிய ஒப்பந்தத்துக்கமைய தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டின் மிகப் பெரிய கப்பலை டொக்யார்ட் உருவாக்கியுள்ளது!

நாட்டின் மிகப் பெரிய கப்பலை கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் தயாரித்துள்ளது.

ஜப்பானின் ஒனோமிச்சி நிறுவனத்துடன் இணைந்து இதற்கான நடவடிக்கையை கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

நிறுவனத்தின் 51 சதவீத பங்களிப்பு ஜப்பானுக்கும் 35 சதவீதப் பங்களிப்பு இலங்கையின் அரச நிறுவனமொன்றுக்கும் உரித்தாகும்.

113 .1 மீற்றர் நீளமான இந்தக் கப்பலின் அகலம் 21. 5 மீற்றர்களும், ஆழம் 8 . 8 மீற்றர்களும் ஆகும். மணிக்கு 14 . 5 மைல் வேகத்தில் இந்தக் கப்பலால் பயணிக்க முடியும்.

முழுமையாக உள்நாட்டு பொறியியலாளர்களின் பங்களிப்புடன் இந்தக் கப்பல் 21 மாதங்களில் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடிப்படை வசதியற்ற குடும்பத்துக்கு வலி.வடக்கு தவிசாளரால் மின்சாரம்!



அளடிவட்டி கும்பளாவளை வட்டாரத்தில் மிகவும் வறுமைநிலையிலும் அடிப்படை வசதிகளின்றியும் வாழ்ந்த குடும்பம் ஒன்றுக்கு – அவர்களின் குடிசை வீட்டுக்கு – வலி.வடக்கு பிரதேசசபையின் தவிசாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதி செயலாளருமான சோமசுந்தரம் சுகிர்தனால் தனது சொந்த நிதியில் 23 ஆயிரம் ரூபா செலவில் மின்சாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

வலி.வடக்கு பிரதேசசபையில் அளவெட்டி கும்பளாவளை வட்டாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் லயன் செ.விஜயராஜின் கோரிக்கைக்கு அமையவே தவிசாளரால் இந்த மின்சாரம் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சியில் விபச்சார விடுதியும் கருக்கலைப்பு நிலையமும் முற்றுகை

யாழ்.தென்மராட்சி கரம்பகம் – பாடசாலை வீதியில் இயங்கிவந்த விபசார விடுதியும், அதனோடு இணைந்து இயங்கிய கருக்கலைப்பு நிலையமும் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளன.

கொடிகாமம் பொலிஸார் நேற்றிரவு (செவ்வாய்க்கிழமை) மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த விபசார விடுதியும், கருக்கலைப்பு நிலையமும் முற்றுகையிடப்பட்டுள்ளன.

இதன்போது விபசாரத்தில் ஈடுபட்டு வந்த இரு பெண்கள் மற்றும் விடுதி உரிமையாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, கருக்கலைப்பு சாதனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசுவமடு மற்றும் நல்லூர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களே விபசாரத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகன்றது.

மேலும், இந்த நிலையத்துக்கு மருந்துப் பொருள்களை வழங்கிய மந்திகை வைத்தியசாலை ஊழியர் ஒருவர் நேற்றிரவு கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கைதான மூவரும் இன்றைய தினம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

## அரச ஊழியர்கள் உள்நாட்டு ஆடையை அடுத்த வருடம் முதல் அணியவேண்டும்

கொழும்பு, நவ.11

அடுத்த வருடம் முதல் அரச ஊழியர்கள் பத்திக் அல்லது கைத்தறி நெசவுத்துணிகளால் தைக்கப்பட்ட ஆடையை அணிய வேண்டும் என அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதற்குரிய வேலைத்திட்டம் பொது நிர்வாக அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் எனவும் இலங்கையின் புடைவை உற்பத்திக் கைத்தொழிலில் நிலவும் பிரச்சினைகளைக்குத் தீர்வு கண்டு, நாடெங்கிலும் உள்ள ஆடை வடிவமைப்புக் கலைஞர்களின் துணையுடன் புதிய ஸ்டைல்களை அறிமுகம் செய்யப் போவதாக அவர் கூறினார்.

எதிர்காலத்தில், பத்திக் ஆடை வடிவமைப்பாளர்களை பயிற்றுவித்து, அவர் களுக்கு என்–வி–கியூ சான்றிதழ்களை வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். துறை சார்ந்தவர்களுக்கு சலுகைக் கடன்கள் வழங்கப்படவுள்ளன எனவும் அமைச்சர் தயாசிறி ஜயசேகர மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வைரஸ் கட்டுப்பட்டதால் ஊரடங்கு தளர்த்தவில்லை!

### அரச மருத்துவர் சங்கம்

கொரோனா வைரஸ் விடயம் தொடர்பாக இலங்கை மக்கள் தொடர்ந்தும் அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் சில பகுதிகளில் தளர்த்தப்பட்டுள்ளதையடுத்து, வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் பாதிப்புக்கள் குறைவு என்று பொது மக்கள் மத்தியில் அநாவசிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால், அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பேணாமல் செயற்படுகின்றமையை அவதானிக்க முடிவதாகவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

மினுவாங்கொடை கொத்தணி உருவானதன் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக உயர்வடைந்ததைப் போன்று குறுகிய காலத்தில் அதிகளவான மரணங்களும் பதிவாகியுள்ளன.

இவ்வாறு பதிவாகிய மரணங்களில் 50 சதவீதமானோர் வீடுகளிலேயே உயிரிழந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், தற்போதுள்ள அபாயமான நிலைமையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் வெள்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இந்த தொற்று ஏற்பட்டால் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு. தொடர்ச்சியாக பதிவாகியுள்ள மரணங்கள் தொடர்பாகவும் ஆராய விசேட குழுவொன்றை நியமிக்கத் தாங்கள் பரிந்துரை செய்துள்ளனர் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, விரைவில் இந்த மரணங்கள் பற்றி பகுப்பாய்வு செய்யப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் மாத்திரமின்றி ஏனைய பகுதிகளில் உள்ள மக்களும் அவதானமாகவே அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெனிங் சந்தை மாறுகிறது பேலியகொடை பகுதிக்கு!

மெனிங் சந்தையை கொழும்புக்கு வெளியில் அதாவது தற்காலிகமாக பேலியகொடைக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.வார இறுதியில் அல்லது அடுத்தவார முதற்பகுதியில், இதற்கான பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஊழியர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆடைத்தொழிற்சாலை ஒன்றிற்கு தையலாளர்கள், உதவியாளர்கள்தேவை

தொடர்புகளுக்கு:- 077 7114 848
applicationagi@outlook.com

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.11.2020 இல் வெளியிடப்பெற்றது.